www.padippakam.com

# ஒன்றுபடுவோம். ஓரணி திரள்வோம். கொலைக் கலாச்சாரத்தை முளையிலேயே கிள்ளியெறிவோம்.

நாம் பிறந்த மண்ணில் சுதந்திரம் கேட்டதால் உற்றாரைப் பறிகொடுத்து, வீடிழந்து, நாடிழந்து அந்நிய மண்ணில் அடைக்கலம் புகுந்து அகதிகளாக வாழும் அன்பார்ந்த தமிழ்மக்களே,

திரு.சபாரத்தினம் சபாலிங்கம் எனப்படும் எமது ஆருயிர் நண்பன், தனது சொந்த வீட்டுக்குள்ளேயே, மனைவி, மகன், உறவினர்கள் முன்னிலையில், பட்டப்பகலில், உதவி வேண்டும் என்கிற போர்வையில் உட்புகுந்த இரு கொலைகாரக் கும்பலினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான்.

யார் இந்த சபாலிங்கம்? ஏன் இந்தப் படுகொலை? கொலைஞர்கள் யார்? என்று தட்டிக் கேட்கப் போகிறோமா? அல்லது நமக்கேன் வீண் வம்பு என வாய்மூடி மௌனித்திருப்போமா?

1970களிலே, மாணவப் பருவத்திலேயே மக்களைப் பற்றிச் சிந்தித்துத் தமிழ் மாணவர் பேரவையைக் கட்டியெழுப்பியவர்களில் இவனும் ஒருவன். ஆட்சியாளர்களுக்கெதிராகப் பேசவே பயந்த அன்றைய நாட்களில் கிராமங்கள், பாடசாலைகள், காடுகள், குடியேற்றப் பண்ணைகள் தோறும் கால்நடையாகவும், சைக்கிளிலும் அலைந்து திரிந்து மாணவர்களை, இளைஞர்களை, தமிழ் மக்களை விடுதலைப் போருக்கென அணி திரட்டியவன். அரசப் பணியில் இருந்தபோதும் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தவன். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு அரிச்சுவடியைக் கற்றுத் தந்தவன். இதனால் சிறிலங்கா சிறைகளிலே பல வருடங்கள் சித்திரவதைகளை அனுபவித்தவன். சிறையிலிருந்து தப்பியோடும் முயற்சியிலே தனது இடுப்பையே முறித்துக்கொண்டவன். அரசு மறுபடி அவனுக்காக வலைவிரித்தபோது எம்மைப்போல் அவனும் இந்த நாட்டில் வந்து தஞ்சம் புகுந்து அகதியானவன்.

அகதியான நிலையிலும் அவன் தனது நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை மறக்கவில்லை. இன்று திசைமாறி, இலக்கு இழந்து இன அழிவை வேகப்படுத்திக் கொண்டிருக்கும் ஈழவிடுதலைப் போராட்டம் விரைவில் சரியான திசையறிந்து உண்மையான இலக்கு நோக்கி முன்னேறும் என்ற நம்பிக்கையுடனும், முன்னேறவேண்டும் என்ற வேட்கையுடனும் விடாமுயற்சியுடன் செயற்பட்டவன். அதற்கான பயணத்தில் சரி எது? பிழை எது? உண்மை என்ன? பொய் என்ன? நீதியா? அநீதியா? என்பவை மக்கள் மத்தியில் விவாதிக்கப்படல் வேண்டும் என்பதும், வருங்காலப் போராட்ட சந்ததிகளுக்காக அவைகள் யாவும் வரலாற்றுப் பதிவுகளாக அமையவேண்டும் என்பதும் இவனது குறிக்கோளாக இருந்தது. அதேவேளை எமது உரிமைகளுக்காகப் போராடும் நாம் மனித உரிமைகளையும் பாதுகாக்கவேண்டும் என்பதிலும் அவன் குறியாகவே இருந்தான். இவனது இந்த முயற்சியின் பயனாக இன்று ஒரு சிறந்த ஆவணக் காப்பகத்தையே எமக்கு உருவாக்கித் தந்துவிட்டுச் சென்றுள்ளான் எமது இனிய நண்பன் சபாலிங்கம்.

சரியாகச் சிந்திக்கத் தெரியாத, உண்மையைக் காணப் பயந்த, நீதியைச் சந்திக்கத் திராணியற்ற படுகோழைகளே இந்தக் கொலைகாரக் கூட்டம். உண்மையைக் வெட்டிக் குழிதோண்டிப் புதைக்கும், நீதியைக் கழுத்தைத் திருகிக் கொல்லும் முயற்சியின் விளைவுதான் இந்தப் போராளி சபாலிங்கத்தின் பச்சைப் படுகொலை.

www.padippakam.com

ஈழத்தில் 1980ஆரம்பங்களில் இடம்பெற்று வந்த தனிமனித விருப்பு வெறுப்புக் கொலைகளை மக்கள் நாம் கண்டும் காணாதவர்களாய் மௌனித்து இருந்ததனாலேயே ஈழப்போராட்டம் இன்றைய அழிவு நிலைக்குத் தள்ளப்பட்டது. அன்று மக்கள் நாம் தட்டிக் கேட்டிருந்தால் இன்று ஆயிரக் கணக்கில் எமதருமைப் புதல்வர்களை, நண்பர்களை, உறவினர்களை, கல்விமான்களை, திறமைசாலிகளை அநியாயமாக இழந்திருக்கமாட்டோம். அன்று நாமனைவரும் ஓரணி திரண்டு ஒற்றுமைக் குரல் எழுப்பியிருந்தால் இன்று எமது தாயகமண்ணில் முக்கால்வாசியைப் பறிகொடுத்துவிட்டு சொந்த ஊருக்குள்ளேயே மக்களை அகதிமுகாம்களுக்குள் தவிக்கவிட்டுவிட்டு குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டிக் கொண்டிருக்க மாட்டோம். சொந்த மண்ணில் கொலைப் பயம் என்றே இந்த அந்நிய மண்ணில் அகதிகளானோம். இங்கும் அந்தக் கொலைக்கரம் நீண்டால் மக்கள் நாம் இனி ஓடுவதெங்கே?

மக்களின் உயிருக்கு உத்தரவாதம் கொடுத்து, அவர்தம் உரிமைக்கு மதிப்பளித்து, அவர்கள் உடைமைகளை பாதுகாத்து, மக்கள் தாம் வாழ்ந்த பாரம்பரியப் பிரதேசங்களைத் தக்கவைத்து, முன்னேறவேண்டிய ஈழப் போராட்டம் அதற்கு மாறாக இன்று, மக்களைப் பணயக்கைதிகளாக ஆக்கி அனைத்தையும் இழக்கவைத்து, எந்நேரமும் எதுவும் நடக்கலாம், நாட்டைவிட்டு எப்படித் தப்பி ஓடலாம் என்ற மனோ நிலைக்கு அவர்களைத் தள்ளிவிட்டுள்ளது. எமது நாட்டில் இந்நிலை நீடிக்க, இங்கிருக்கும் நாம் உடந்தையாக இருக்கக்கூடாது. எமது மண்ணின் இன்றைய பச்சைப் படுகொலைப் பண்பாடு இங்கேயும் தொடர அனுமதிக்கமுடியாது.

இதனைச் சாதிக்கும் சக்தி மக்களாகிய உங்களிடமே உண்டு. மக்கள் சக்தி மாபெரும் சக்தி.
மக்கள் சேர்ந்தால் மலையையும் நகர்த்தலாம்.
மக்களே தூங்கியது போதும். இல்லையெனில்
இக்கொலைப் பட்டியல் தொடரவே செய்யும்.

மக்களே மௌனித்திருந்தது போதும். இல்லையெனில்
இங்கேயும் நாம் எம்மை, எமது நண்பர்களை, எமது மக்களில் பலரை இழக்கவேண்டியேற்படும்.

எனக்கென்ன வந்தது என்ற மனோநிலை போதும். இல்லையெனில்
இந்நாட்டு மக்களால் நாம் வெறுக்கப்பட்டு விரட்டப்படும் காலம் வெகு விரைவில் வரும்.

இப்போதே விழித்தெழுங்கள். இந்தப் படுகொலைக் கும்பலை இனம் காணுங்கள்.
கொலைக் கலாச்சாரத்தை வேரோடு பிடுங்கி எறியுங்கள்.

சிந்திப்போம். தீர்மானிப்போம். செயற்படுவோம்.
ஒன்றுபடுவோம். ஒழுங்கமைப்போம். ஓரணிதிரள்வோம்.

*சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்.*
*பாரீஸ், பிரான்ஸ்.* 04.05.1994